**Hindu tamil organic farming - 31.11.18**

இந்து தமிழ் திசை

TRICHY 3

செவ்வாய், அக்டோபர் 30, 2018

# சிறுகமணியில் நாளை அங்கக வேளாண்மை பயிற்சி முகாம்

■ திருச்சி

சிறுகமணியில் நாளை (அக்.31) அங்கக வேளாண்மை குறித்த பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

இதுகுறித்து சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் கூ.ஈஸ்வரன் தெரிவித்துள்ளது:

திருச்சி மாவட்டம் சிறுகமணியிலுள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை (அக்.31) அங்கக வேளாண்மை என்ற தலைப்பில் இலவச பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. இதில் அங்கக வேளாண் பண்ணையின் பயன்கள், பண்ணை அமைக்கும் வழிமுறைகள், அங்கக வேளாண் பண்ணை சார்ந்த தொழில்நுட்பங்கள், அங்கக வேளாண் விளைபொருட்களின் அங்கீகாரம், பதிவு செய்தல், அங்கக சான்றளிப்பு, அமிர்த கரைசல், பஞ்சகவ்யா, மூலிகைப் பூச்சி விரட்டிகள் தயாரிப்பு முறைகள் குறித்தும் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

மேலும், அங்கக வேளாண் பண்ணை அமைத்து அங்கக விளைபொருட்களை உற்பத்தி செய்து உள்நாடு மற்றும் அந்நிய சந்தையில் வருவாய் ஈட்டுவதற்கான வழிமுறைகளும் விளக்கப்பட உள்ளன. எனவே, விவசாயிகள், தொழில் முனைவோர், இளைஞர்கள் உள்ளிட்டோர் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இதுகுறித்த கூடுதல் விவரங்களுக்கு 0431-26144017, 2614257 என்ற தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

TY-TY

**dinakaran drone - 23.11.18**

தினகரன் திருச்சி

16 • திருச்சி 23.11.2018

லால்குடி வட்டாரத்தில்

# ஹெலி கேமரா மூலம் சேதமான வாழை ஆய்வு



லால்குடி வட்டாரத்தில் கஜா புயலால் பாதித்த பகுதிகளை ஹெலிகேமரா மூலம் வேளாண் பல்கலை விஞ்ஞானிகள் ஆய்வு செய்தனர்.

திருச்சி, நவ.23: லால்குடி வட்டாரத்தில் கஜா புயல் சேதமான வாழை பயிர்களை ஹெலிகேமரா மூலம் ஆய்வு செய்யப்பட்டது.

பயிர் கண்காணிப்பு, பயிர் காப்பீடு மதிப்பீட்டுக்கு வேளாண் துறைக்கு வேளாண் பல்கலைக்கழகம் மிகவும் உறுதுணையாக இருந்து ஆலோசனை வழங்கி வருகிறது. தென்னை, வாழை மற்றும் நீரில் மூழ்கிய நெற்பயிரின் சேதங்களை மதிப்பீடு செய்ய வேளாண் பல்கலையிலிருந்து இரண்டு வகையான ஆள் இல்லா விமானங்களை பயன்படுத்தி கஜா புயலினால் ஏற்பட்ட வாழை சேதத்தை மதிப்பீடு செய்ய தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் குமார், கோவை வேளாண் பல்கலைக்கழக தொலை உணர்வு மற்றும் புவிசார் தகவல் தொழில்நுட்ப துறைக்கு அறிவுறுத்தலின் பேரில் சேத மதிப்பை லால்குடி தாலுகாவில் விஞ்ஞானிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் தோட்டக்கலைத் துறை ஹெலிகேமரா மூலம் நிபுணர் குழுவுடன் இணைந்து லால்குடி வட்டாரத்தில் சாத்தமங்கலம், நன்னிமங்கலம், ஆலந்தி மேடு ஆகிய பகுதிகளில் கணக்கெடுப்பு பணிகள் நடைபெற்றது.

இயற்கை பேரழிவால் ஏற்படும் பயிர் சேதங்களை விரைவாகவும், துல்லியமாகவும் மதிப்பீடு செய்ய ஹெலிகேமராவை பயன்படுத்தலாம் என தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் குமார் ஆலோசனை கூறியுள்ளார்.

பேராசிரியர் பழனிவேலன் தலைமையில், திட்ட ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன், தோட்டக்கலை உதவி இயக்குனர் (பொ) தனசேகர் உதவியாக இருந்தனர் மற்றும் முன்னோடி விவசாயிகள் ராஜகோபால், வீரசேகரன், நல்லேந்திரன் உடனிருந்தனர். இதில் 1,500 எக்டேரில் சேதமடைந்த வாழைத்தோட்டங்களை ஆய்வு செய்தனர்.

Times of india drone 22.11.18

THE TIMES OF INDIA, TRICHY
THURSDAY, NOVEMBER 22, 2018

# KVK using drones to assess crop damage due to Cyclone Gaja

Vincent.Arocklaraj
@timesgroup.com

**Trichy:** The Tamil Nadu Agriculture University (TNAU), for the first time has commenced the process of assessing the volume of damage caused to various crops due to Cyclone Gaja, using drones in Trichy district.

Indian Council of Agricultural Research (ICAR)-Krishi Vigyan Kendra (KVK), Sirugamani in Trichy, Remote Sensing and GIS, TNAU, Coimbatore and Department of Horticulture, Trichy have jointly conducted the survey using drones over cyclone-hit banana cultivating areas such as Sathamangalam, [illegible] Nanjunangalam and Anandhimedu in Lalgudi block in Trichy on Wednesday.





According to a TNAU professor, drones can be utilized effectively for quick and precise estimation of crop damage caused by natural disasters. (Right) An aerial view of a banana plantation in Lalgudi

Since the drones can be utilized effectively for quick and precise estimation of crop damage caused by natural disasters, the university has commenced the process in Trichy, said S Pazhanivelan, professor and head of department, remote sensing and GIS, TNAU, Coimbatore.

"The university has two drones of quadcopter and construction fixed-wing unmanned aerial vehicle (UAV). These two drones have been used to assess the extensive damage caused by the severe Cyclone Gaja, [illegible] plantations and submerging of paddy fields in delta as well as coastal districts," he said.

Earlier TNAU scientists had carried out the process with the help of remote sensing and GIS to assess the impact of the disaster. Drones are used to get more accurate and precise evaluation, he said.

"The quadcopter flew at 30 to 50m height and assessed the field level damages while the fixed-wing UAV monitored the damages in 3,700 acres of banana plantations spreads across the block," he further said.

As per the direction of vice-chancellor of TNAU, N Kumar, the survey would be carried out in cyclone-hit Pattukottai in Thanjavur and Mannargudi in Tiruvarur. The report would be submitted to the Tamil Nadu government once the process is completed, he added.

**Hindu tamil value add training 13.11.18**

இந்து தமிழ் திசை

TRICHY

4 செவ்வாய், நவம்பர் 13, 2018

## சிறுகமணியில் நாளை காய்கறி பதப்படுத்த பயிற்சி

**திருச்சி:** சிறுகமணியில் நாளை (நவ.14) காய்கறி, பழங்களை பதப்படுத்தும் பயிற்சி நடைபெற உள்ளது.

இதுகுறித்து திருச்சி மாவட்டம் சிறுகமணியிலுள்ள வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் க.ஈஸ்வரன் தெரிவித்துள்ளது: காய்கறிகள், பழங்களை பதப்படுத்துவது குறித்த ஒருநாள் இலவசப் பயிற்சி நாளை (நவ.14) சிறுகமணியில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது. இதில் காய்கறிகள், பழங்களை பதப்படுத்தும் முறைகள், உணவு தயாரித்தலுக்கான உரிமம் பெறுதல், தொழிலுக்கான வங்கிக் கடன் பெறுதல், பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் அளிக்கப்பட உள்ளன. விவசாயிகள், தொழில் முனைவோர்கள், இளைஞர்கள், கிராம மற்றும் நகர்ப்புற பெண்கள் இப்பயிற்சியில் கலந்துகொண்டு பயன்பெறலாம். இதுகுறித்த கூடுதல் விவரங்களுக்கு 0431-2614417, 2614457 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**Dinakaran value addition 13.11.18**



# காய்கறி, பழங்கள் பதப்படுத்த பயிற்சி

திருச்சி, நவ.13: தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நாளை (14ம் தேதி) காலை 9 மணிக்கு காய்கறிகள் மற்றும் பழங்கள் பதப்படுத்துவது குறித்து ஒருநாள் இலவச பயிற்சி நடக்கிறது.

பயிற்சியில் காய்கறிகள், மற்றும் பழங்களை பதப்படுத்துவது பற்றிய முறைகள், உணவு தயாரித்தலுக்கான உரிமம் பெறுதல், தொழிலுக்கான வங்கி கடன் பெறுதல் மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்த தொழில்நுட்ப ஆலோசனைகள் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் துறை வல்லுனர்கள் மூலம் எடுத்துரைக்கப்பட உள்ளது. விவசாயிகள், தொழில் முனைவோர்கள், இளைஞர்கள், கிராம மற்றும் நகர்புற பெண்கள் இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம் என சிறுகமணி வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் ஈஸ்வரன் கேட்டுக்கொண்டுள்ளார். மேலும் விவரங்களுக்கு 0431-2614417, 2614457 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். www.kvktrichy என்ற இணைய தளத்திலும் பயிற்சி பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**Dinamalar value addition 13.11.18**



# சிறுகமணியில் நாளை பதப்படுத்தும் பயிற்சி

பெட்டவாய்த்தலை: சிறுகமணி வேளாண் அறிவியல் நிலையத்தில் நாளை (14ம் தேதி) காய்கறிகள் மற்றும் பழங்கள் பதப்படுத்துவது குறித்த பயிற்சி நடக்கிறது.

இதில், பதப்படுத்தும் முறைகள், உணவு தயாரித்தலுக்கான உரிமம் பெறுதல், தொழிலுக்கான வங்கிக் கடன் பெறுதல் மற்றும் சந்தைப் படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்படும். மேலும் தகவல்களுக்கு 0431 2614417, 2614457 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

பயிற்சியில் விவசாயிகள், தொழில் முனைவோர்கள் கலந்து கொண்டு பயனடையலாம். இவ்வாறு வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் சவ்வரன் தெரிவித்துள்ளார்.